## கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

ஆங்கிலப் பாடத்துடன் கூடிய பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை/கலைமாணி (வெளிவாரி) முதல் பரீட்சை மற்றும் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களை அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்தல் – 2023/2024 கல்வி வருடம்

2023/2024 ஆம் கல்வி வருடத்தில் ஆரம்பமாகும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளைத் தொடர்வதற்காக இலங்கை அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு ஆங்கிலப் பாடத்துடன் கூடிய பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை/ கலைமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சை மற்றும் விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்த அரசாங்க அல்லது அரசாங்க அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

(i) கலைப் பட்டப் பாடநெறி (ஆங்கிலப் பாடத்துடன் கூடிய)

(ii) விஞ்ஞானமானிப் பட்டப் பாடநெறி (உயிரியல் /பௌதீகவியல் /பிரயோகவியல் விஞ்ஞானம்)

02. விண்ணப்பதாரர்கள் இதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) (அ) கலைப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு,
2019 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னரான வருடமொன்றில் ஆங்கிலப் பாடத்துடன் கூடிய, பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை/கலைமாணி (வெளிவாரி) முதலாவது பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) உயிரியல், பௌதீகவியல் அல்லது பிரயோகவியல் விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு,
2019 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு பின்னராக நடாத்தப்பட்ட விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு ஆசிரியராக 05 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், உரிய ஆசிரியர் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றில், தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்றில், பல்கலைக்கழகமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப் பாடநெறி ஒன்றைத் தொடர்வதற்காக பதிவு செய்யாதவராக இருத்தல்.

(iv) ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் உள்ள உயிரியல், பௌதிகவியல் அல்லது பிரயோகவியல் விஞ்ஞானப் பாடநெறி தொடர்பில், உரிய பாடநெறிக்கு தகுதி பெறுவதற்காக க.பொ.த (உயர் தர) பரீட்சையில் அல்லது விஞ்ஞானமானி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் உரிய பல்கலைக்கழகத்தினால் அடிப்படைத் தேவையாகக் கருதப்படும் பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(v) முழு நேர சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய ஆசிரியர் ஒருவராக இருத்தல்.

03. அரசாங்க ஆசிரியர்களது விண்ணப்பப்படிவங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளராலும், அரசாங்க அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களது விண்ணப்பப்படிவங்கள் உரிய அதிபர்/ முகாமையாளரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

04. அரசாங்க அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களது அனுமதிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் குறித்த பாடசாலையின் அதிபரால்/ முகாமையாளரால் அவ் ஆசிரியருக்கு கற்கை விடுமுறை வழங்க அனுமதிக்க முடியும்/அனுமதிக்க முடியாது என்பதாக விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

05. அனைத்து விண்ணப்பப்படிவங்களும் இதில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இரண்டு (02) பிரதிகள் சகிதம் 2024.10.25 ஆந் திகதிக்கு முன்னர் "கல்விப் பணிப்பாளர், மனிதவள அபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் 2023/ 2024 (ஆசிரியர்களுக்குரியது)" என்பதாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

06. இந்த அணுகுமுறையின் கீழ் ஆங்கிலப் பாடத்துடன் கூடிய பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில்/ கலைமாணி (வெளிவாரி) முதலாவது பரீட்சையில் அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள், உரிய பாடத்திற்கு பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

07. சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை பெற்றுக்கொள்வதற்குரிய உரித்து தொடர்பில் நேர்முகப் பரீட்சையின் போது விசாரிக்கப்படும்.

08. பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குவது தொடர்பில் இந்த அமைச்சு கட்டுப்படவில்லை.

விண்ணப்பப்படிவம் மூன்று மொழிகளிலும் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் (www.moe.gov.lk) விசேட அறிவித்தல்கள் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

09. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது பொருத்தப்பாடின்மை காணப்படும் பட்சத்தில் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமைய நடவடிக்கையெடுக்கப்படும்.

ஜே. எம். திலகா ஜயசுந்தர,
செயலாளர்,
கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு.

10-44